# ஜெபம்

# 2

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

எல்லாமே தவறாகப் போய்க்
கொண்டிருப்பதின் நிமித்தமாக, அது நாம்
ஜெபத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கு
அடையாளமல்ல. எப்படியும் நாம்
தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருப்போம்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956, பத்தி எண் 84

---

தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறாரா? ["ஆம்."] ஆமாம். அவர் மிகச் சீக்கிரத்தில் பதிலளிக்கிறாரா? எல்லா நேரமும் அவ்வாறு இல்லை. அப்படித்தானே, இல்லை. சிலநேரங்களில், அவர் நம்மைக் காத்திருக்கச் செய்கிறார். அது சரிதானா? ["ஆம்."]

ஆனால், தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார். அவர் அவ்வாறு பதிலளிப்பதில்லையா?

எல்லாமே தவறாகப் போய்க் கொண்டிருப்பதின் நிமித்தமாக, அது நாம் ஜெபத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கு அடையாளமல்ல. எப்படியும் நாம் தொடர்ந்து

**ஜெபித்துக் கொண்டேயிருப்போம்.**

நாம் அவ்வாறு ஜெபிக்க மாட்டோமா?

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.*

# அவள் சுயநலமில்லாதவளாய் இருந்த காரணத்தால் அவளுக்கு ஒரு தீர்க்கதரிசி அளிக்கப்பட்டான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதறல்

Jeffersonville, Indiana, USA
63-09-01E

71. அன்னாள் என்னும் மலடியைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ளது, அவளுக்கு ஒரு மகன் வேண்டுமென்று விரும்பினாள்.



ஆலயத்தின் ஆசாரியனும் கூட அவள் குடித்து வெறித்திருக்கிறாள் என்று கருதும்

அளவிற்கு அவள் உபவாசித்து ஜெபம் செய் தாள். அவள் அத்தகைய பதறல் கொண்டாள்.



மற்றுள்ள பெண்கள் அந்தப் பெண் என்ன தொப்பி அணிந்திருக்கிறாள் என்றும் வேறொருத்தி என்ன உடையுடுத்திருக்கிறாள் என்றும் கவனித்து (அது என்னவென்று உங்களுக்குத் தெரியும்). பண்ணையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அளவளாவிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அன்னாள் அப்படியில்லை. அவள் கூட்டத்தின் வழியாக கடந்துவந்து, நேராக பீடத்திற்குச் சென்றாள். அவள் அத்தனை நாட்களாக உபவாசித்துக் கொண்டிருந்தாள். அவள் பேரிலுள்ள நிந்தை நீங்க வேண்டுமென்று அவள் விரும்பினாள்.



இன்றைக்கு காரியம் எவ்வளவு வித்தியாச மாயுள்ளது! இக்காலத்தில் குழந்தை பெறுவது என்பது நிந்தையாகக் கருதப்படுகின்றது.

ஆனால் அக்காலத்திலோ குழந்தை இல்லாதது நிந்தையாகும்.



அவள் முழங்காற்படியிட்டு, ஜெபம் செய்தாள். அவள் ஆலயத்தின் மதிப்பையோ அல்லது ஆசாரியனின் மதிப்பையோ கவனிக்கவில்லை. அவள் அதிக துயரப்பட்டு, கண்ணீர் அவள் கன்னங்களின் வழியாய் வழிந்தோடியது.

அவள் பதறல் கொண்டு, “தேவனாகிய கர்த்தாவே, எனக்கு ஒரு மகனைத் தாரும்,

எனக்கு ஒரு மகனைத் தாரும்" என்று அழுது கொண்டிருந்தாள்.



72. கவனியுங்கள், அவள் சுயநலம் கொண்டவளல்ல, **கர்த்தர் அவள் விண்ணப்பத்தைக் கேட்டு, பதிலளித்து, ஒரு குமாரனைத் தந்தபோது, அவள் அவனை தேவனுக்கே திரும்பக் கொடுத்துவிட்டாள்.**





அவளுடைய ஜெபத்தை தேவன் கேட்ட பின்பு, அவள் சுயநலம் கொள்ள விரும்பவில்லை.

எனவே, அவர் அவளுக்கு ஒரு தீர்க்கதரிசியைக் கொடுத்தார்.

அது அவளுக்கு அளிக்கப்பட்ட கூடுதல் ஆசீர்வாதம்.



ஓ, அவர் இத்தகைய கூடுதல் ஆசீர்வாதங்களை நிறையத் தருகிறார்.

ஒரு குமாரனை மாத்திரமல்ல, ஒரு தீர்க்கதரிசியையும் அவர் அளித்தார்.

1 சாமுவேல் 1



இஸ்ரவேலிலே அநேக ஆண்டுகளாக பிரத்தியட்சமான தரிசனம் இல்லாமலிருந்தது. **அநேக ஆண்டுகள் கழித்து, சாமுவேல் முதல் தீர்க்கதரிசியாக தோன்றினான். இதற்குக் காரணம், ஒரு தாயார் பதறல் கொண்டு, குழந்தைக்காக வேண்டினாள்.**

குழந்தை பெறக்கூடிய பருவத்தை அவள் கடந்துவிட்டிருந்தாள். ஒருக்கால் அவளுக்கு அப்பொழுது எழுபது வயது இருந்திருக்கலாம், அவள் பதறிப்போய் ஜெபம் செய்தாள். அவளுக்கு அந்த குழந்தை எப்படியாயினும்

வேண்டியதாயிருந்தது. அது என்ன? **கர்த்தர் அவளுடன் பேசினார் என்பதில் சந்தேக மில்லை.**



**கர்த்தர் உங்களுடன் பேசும் வரைக்கும் நீங்கள் பதறல் கொள்ள முடியாது.**













ஓ, சபையே, எழும்பி உன்னை அசைத்துக் கொள்! உன் மனசாட்சி உன்னை குத்தட்டும். இந்த மணி நேரத்தில் உறக்கத்தினின்று எழு! நாம் பதறல் கொள்ள வேண்டும். இல்லையேல் அழிந்து போக வேண்டும்! ஏதோ ஒன்று தேவனிடத்திலிருந்து வந்து கொண்டிருக் கிறது. அது "கர்த்தர் உரைக்கிறதாவது" என்றறிவேன். ஏதோ ஒன்று வந்து கொண் டிருக்கிறது. நாம் பதறல் கொள்வது நல்லது. அது மரணத்திற்கும் ஜீவனுக்கு

**மிடையே உள்ள ஒன்று. அது நம் மத்தியில் கடந்து செல்லும், நாம் அதை காண மாட்டோம்.**



**அவள் சுயநலமில்லாதவளாய் இருந்த காரணத்தால் அவளுக்கு ஒரு தீர்க்கதரிசி அளிக்கப்பட்டான்.**

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.*

(Moody Publishers / FreeBibleimages.org) *நன்றி.*

# கேள்வி எண் 163



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 61-10-15 M
# கேள்விகளும் பதில்களும்
# COD #15

**163. கர்த்தரைக் கண்டு கொள்வதற்கு மிகச் சிறந்த வழி என்ன... சில முக்கியமான விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி எது என்பதைக் குறித்த உங்கள் கருத்து என்ன?**

இப்பொழுது... நான் நினைக்கவில்லை நான்... அதன் தொடர்ச்சி எனக்கு கிடைக்கிறதா என்று பார்க்கட்டும். “மிகச் சிறந்த வழி எது என்பதற்கான உங்கள்

கருத்து (அங்கே ஒரு காற்புள்ளி (comma) இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்)... ‘சில முக்கியமான விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி எது என்பதைக் குறித்து உங்கள் கருத்து என்ன?‘



183. அருமை நண்பனே, நான் உமக்குச் சொல்லுகிறேன், சில முக்கியமான விஷயங்களில் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி ஜெபமே. பாருங்கள்?



184. இப்பொழுது, இதை நான் ... இங்கு ஒரு அருமையான சிறு காரியம் உள்ளது. மிகவும் முக்கியமான விஷயம் உங்களுக்கு இருக்குமானால்... நான் கடைபிடிக்கும் முறை இதுவே. அதை நான் கர்த்தருக்கு முன்பாக கொண்டு செல்வேன். அது எப்பொழுதும் என் பெலனாக அமைந்துள்ளது; நான் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து, அவர் என்ன சொல்லுகிறாரென்று பார்ப்பேன். நான் அந்த விஷயத்தில் எந்த பக்கத்தையும் ஆதரிக்காமல் நடுநிலை வகிப்பேன். நான், ‘இப்பொழுது, பரலோகப் பிதாவே,

அது இப்படி இருக்க வேண்டும்...' என்று சொல்வதில்லை.



185. என் விஷயத்தில், பெரும்பாலும், அது மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பது உண்மையே. ஆகையால் நான் தரிசனத்துக்காக காத்திருப்பேன். ஆனால் அநேகருடன் தேவன்

தரிசனத்தின் மூலம் ஈடுபடுவதில்லை. எனவே நீங்கள் தரிசனத்துக்காக காத்திருக்க வேண்டுமென்று ஆலோசனை கூற மாட்டேன்.



பாருங்கள்? ஏனெனில் சிலருக்கு தரிசனம் கிடைக்கின்றது. சிலர் வேறொன்றை செய்கின்றனர்.

**நீங்கள் செய்பவைகளை என்னால் செய்ய முடியாது – நீங்கள் தேவனை சேவிக்கும் வழியில் – நான் செய்பவைகளை உங்களால் செய்ய முடியாது. பாருங்கள்? தேவன் வெவ்வேறு விதமாக நம்முடன் ஈடுபடுகிறார்.**





186. நான் உங்கள் ஸ்தானத்தில் இருந்து கர்த்தரிடத்திலிருந்து தரிசனம் பெறாமலிருந்தால், நான் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து, ‘கர்த்தாவே, என்ன தீர்மானம் செய்ய வேண்டுமென்று எனக்குக் காண்பியும்‘ என்று

அவரைக் கேட்பேன். அதை ஒரு வழியில் செய்ய உங்களுக்கு உணர்வு தோன்றுமானால், சிறிது காத்திருங்கள், அதன்பிறகு இன்னும் சிறிது அதிகம் காத்திருந்து. எந்த வழியில், எந்த பக்கம் சாய்கிறீர்கள் என்பதைப் பாருங்கள், எந்த பக்கம் ஆவியானவர் … ‘பிதாவே, என் இருதயத்தில் உள்ளதை நீர் அறிந்திருக்கிறீர், அதனால் பரவாயில்லை. நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புவதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்‘ என்று அவரைக் கேளுங்கள்.



187. கூட்டங்களைக் குறித்தும் சில நேரங்களில் நான் அப்படித்தான் செய்கிறேன். இந்த வழியாக அல்லது அந்த வழியாக செல்ல வேண்டுமென்று நான் வழிநடத்தப்படுவதாக எனக்குத் தோன்றும், அப்பொழுது நான்

அந்த வழியாக செல்வேன். அப்படித்தான் அதை செய்ய வேண்டும், ஏனெனில் அது ஜெபத்தில் வைக்கப்படுகிறது; நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு சிறப்பானதை செய்கிறீர்கள்.



188. இதை நான் விசுவாசிக்கிறேன், என் நண்பர்களே.

முன்காலத்தில், புதிய ஏற்பாட்டின் காலத்தில் பவுல் இரு வழிகளுக்கு இடையே மாட்டிக் கொண்டு, எந்த வழியாக செல்ல வேண்டுமென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் தவறான வழியில் செல்லப் புறப்பட்ட போது, அவனுக்கு மக்கதோனிய அழைப்பு வந்தது.



நான் விசுவாசிப்பது என்னவெனில், நீங்கள் தேவனுக்காக ஒரு தீர்மானம் செய்து, உங்களால் முடிந்த வரைக்கும் அதை மிகச் சிறந்த முறையில் செய்வீர்களானால், தேவன் உங்களைத் திருத்தி, நீங்கள் தவறு செய்யாதபடி பார்த்துக் கொள்வார். தேவன் அவ்விதம் செய்வாரென்று நான் விசுவாசிக்கிறேன்.

★★★★★

ஒரு மனிதன் இதைக் குறித்துக் கருத்தாய் ஜெபம் பண்ணவேண்டும். இல்லையெனில் அவன் தன் வாழ்க்கை முழுவதையும் நாசமாக்கிக் கொள்வான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஒரு மணவாட்டியை தெரிந்து கொள்ளுதல்
# *65-0429*E

நமக்கு விவாகமாக வேண்டிய நேரம் வரும்போது, நாம் சற்று யோசிக்கக் தலைப்பட்டால். நாம் மனைவி அல்லது கணவனை தெரிந்துக்கொள்ளும் விஷயத்தில ஆராய்ந்து பார்க்க முற்பட்டால்..... ஒரு மனிதன் இதைக் குறித்துக் கருத்தாய் ஜெபம் பண்ணவேண்டும். இல்லையெனில் அவன் தன் வாழ்க்கை

முழுவதையும் நாசமாக்கிக் கொள்வான்.



"மரணம் நம்மை பிரிக்குமளவும்" என்னும் பிரதிக்ஞை

ஞாபகமிருக்கட்டும், அவன் தவறாக தெரிந்து கொள்வதன் மூலம் தன் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்ள முடியும்.



ஆனால் அவன் தெரிந்தே தவறான தீர்மானம் ஒன்றைச் செய்து, அவனுக்கு மனைவியாயிருக்கக் தகுதியில்லாத ஒரு பெண்ணை மணம் புரிந்துக்கொண்டால், அது அவனுடைய தவறே. அவ்வாறே ஒரு பெண்ணும். ஒருவன் தனக்குக் கணவனாயிருக்க தகுதியற்றவன் என்று அறிந்த பின்பும், அவனை மணந்து கொண்டால், அது அவளுடைய தவறாகும். எது சரி எது தவறு என்று தெரிந்த பின்பும் அவ்வாறு செய்தால். எனவே இந்த

விவகாரத்தில் நீங்கள் நான்றாக ஜெபம் செய்யாமல் ஈடுபடக்கூடாது.



*ஒரு மணவாட்டியை தெரிந்து கொள்ளுதல் 65-0429*E

~ 7 ~



★★★★★

# ஒரு மனிதன் எங்ஙனம் தேவனை மேற்கொள்ள முடியும்? உங்களால் முடியும். உங்களால் முடியும். ஒரு மனிதன் தேவனை மேற்கொள்ள முடியும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதறல்

Jeffersonville, Indiana, USA

63-09-01E

56. கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு வேதத்தில் காணப்படும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

தொடக்கத்தில் யாக்கோபு விசாரமற்ற ஒருவனாக இருந்தான். சேஷ்டபுத்திரபாகம் அவனுக்கு மிகவும் முக்கியமானது என்று அவன் மனதில் எண்ணம் கொண்டான். அதை எந்த வழியிலாகிலும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவன் முயன்றான். அதைப் பெற்றுக் கொண்ட பின்னர் எல்லாமே சரியாயிற்று என்று அவன் நினைத்தான். ஏசா மான் வேட்டையாடிவிட்டு களைப்பாக வந்தான். அவனுக்கு அதிக பசி உண்டாயிற்று. ஒரு பெரிய பானை நிறைய கூழ் அவனுக்கு தேவைப்பட்டது. அதைக் கண்டபோது, நாள்

முழுவதும் நடந்து களைத்துப்போய் பசியுற்றிருக்கும் ஒரு மனிதனுக்கு மிகவும் சோதனையாக இருந்திருக்கும், அவன் தன் சகோதரனாகிய யாக்கோபிடம், "நான் மயக்க நிலையில் இருக்கிறேன். இதில் எனக்குக் கொஞ்சம் தா" என்று கெஞ்சினான்.



யாக்கோபு, "நீ எனக்கு சேஷ்ட புத்திர பாகத்தைத் தருவதாக ஆணையிட்டுக் கொடுத்தால் நான் தருவேன்" என்றான். பாருங்கள்? எந்த வழியில் அதைப் பெற்றாலும் அவனுக்குக் கவலையில்லை. எனவே அவன் அதைப் பெற்றுக் கொண்டான். சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு எல்லாமே முடிவுற்றது என்று அவன் நினைத்தான். (சகோ.

பிரான்ஹாம் பீடத்தை நான்கு முறை தட்டு கிறார் – ஆசி).

57. பெந்தெகொஸ்தேயினரே, அங்கு தான் நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள். தேவனுடைய ஆவியினால் நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்கள். சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் என்பதால் எல்லாமே முடிவுற்றது என்று எண்ணம் கொண்டீர்கள். அது தொடக்கம் தான். அது தொடக்கம் தான். “அவருக்குச் செவி கொடுங்கள்” என்னும் செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்த பிறகு அது மகனாக வளர்கிறது. அதற்கு பிறப்புரிமை உண்டு. ஆனால் குழந்தையிலிருந்து அது பயிற்சி பெற்று, நிரூபிக்கப்பட வேண்டியதா யுள்ளது. அவன் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதவன் என்று நிரூபிக்கப்பட்டால், அவன் சுதந்தரவாளியாக முடியாது. தகப்ப னுடைய வேலையில் அவன் சிரத்தை காண் பிக்காமல் போனால் அவன் சுதந்தரவாளியாக முடியாது.

அது போன்று, பரிசுத்த ஆவி பெந்தெகொஸ்தே மக்களின் மீது விழுந்த போது, அவர்கள் ஆவியின் வரங்கள் போன்றவைகளை மீண்டும் பெற்றுக் கொண்டனர். அவர்கள் ஆவியினால் மறுபடியும் பிறந்த காரணத்தால், எல்லாம் முடிவடைந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டனர். ஆனால் மகன் அவனுடைய ஸ்தானத்தில் பொருத்தப்பட வேண்டியவனாயிருக்கிறான். அவன் தகப்பனுக்கு உண்மையாயிருப்பான் என்று நிரூபிக்கப்பட்ட பின்னர், அவன் பொதுவான ஸ்தலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அவனுடைய அங்கி கழற்றப்பட்டு, வேறொரு அங்கி அவனுக்கு உடுத்துவிக்கப்படும், அதன் பின்னரே அவன் மகனாக நியமிக்கப்பட்டு அவன் தகப்பன் பெற்றுள்ள அனைத்திற்கும் சுதந்திரவாளியாகிறான்.

58. தேவன் அதைதான் தமது குமாரனுக்கு மறுரூப மலையின் மேல் செய்தார். அவர் ஒரு மேகத்தினால் நிழலிடப்பட்டு மறுரூபமானார். அவருடைய வஸ்திரம் சூரியனைப் போல் வெண்மையாயிற்று. ஒரு சத்தம், “இவர்

என்னுடைய நேசக் குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். மோசேயும் நியாயப்பிர மாணமும் தவறின. இதுதான் இவர். இவருக் குச் செவி கொடுங்கள்" என்றது. அவர் குமாரன் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார். பாருங்கள்?



The Transfiguration by Carl Bloch

59. சேஷ்ட புத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டதனால் எல்லாமே முடிந்துவிட்டது என்று யாக்கோபு கருதினான். பெந்தெ கொஸ்தே மக்களும் அவ்வாறே கருதி, தங்களை ஸ்தாபித்துக் கொள்ள ஆரம்பித்த னர். ஒருத்துவம், திரித்துவம் போன்ற எல்லா வித ஸ்தாபனங்களும் உண்டாகி, ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக்கொண்டு, அதன் மூலம் அவர்களிடம் 'அடையாளம்' (Token) காணப்படவில்லை என்பதை நிரூபித்தனர். அவர்களிடையே குரோதம், விரோதம் சண்டை... பாருங்கள்? அவர்கள் அங்குதான் சென்றுவிட்டனர்.

யாக்கோபு அப்படித்தான் நினைத்தான். ஆனால் அவனுடைய ஜீவனைக் குறித்த பயம் ஓரிரவு அவனுக்குள் குடி கொண்டது, அவன் பதறல் கொண்டான். "என்னைக் கொன்று போட ஆற்றின் அக்கரையில் என் சகோதரன் காத்துக் கொண்டிருக்கிறான்" என்னும் நினைவு அவனைக் கலங்கடித்தது. அவன் பெற்றுக் கொண்ட அந்த சேஷ்ட புத்திரபாகமே. அவன் உயிரிழக்க காரணமாயிருக்கும் போலிருந்தது.

அவ்வாறே, நீங்கள் எந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்தீர்களோ, நீங்கள் கவனமாயிராமற் போனால், அதே பரிசுத்த ஆவி உங்களை முடிவில் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தும். அது உண்மை. நோவாவைக் காப்பாற்றின அதே தண்ணீர்தான் உலகத்தை நியாயந்தீர்த்தது. நீங்கள் 'மத வைராக்கியம்' (Fanaticism) என்றழைக்கும் அதுவே உங்களை உங்கள் வாழ்க்கையின் இறுதியில் குற்றப்படுத்தும்.



60. அவன் வாழ்க்கை முடிவடையப் போகிறது என்று யாக்கோபு அறிந்தான். அவன் சகோதரன் அவனைச் சந்திக்க

நானூறு ஆட்களுடன் புறப்பட்டு வருகிறான் என்னும் செய்தியை ஒருவன் கொண்டு வந்தான். திகில் அவனைச் சூழ்ந்தது. அவன் ஒரு மனிதனை காளைகளுடனும், ஆடுமாடு களுடனும் முன்னால் அனுப்பி, அவனுடைய சகோதரன் ஏசாவுக்கு சமாதான காணிக்கை யளிக்க விரும்பினான். அதன்பின்பு அவன் குழுக்களை ஒன்றன் பின் ஒன்றாக அனுப்பி, அவன் கோபத்தைத் தணிக்க முயன்றான். "இவையாவும் அவன் கோபத்தைத் தணிக்காது. ஒருக்கால் அவன் என்னைக் காட்டிலும் ஐசுவரியவானாயிருக்கலாம். இதெல்லாம் அவனுக்குத் தேவையிருக்காது" என்றும் அவன் நினைத்தான். அவன் தனது மனைவி களையும் பிள்ளைகளையும் ஏசா காணும்படி முன்னால் அனுப்பினான்; நிச்சயமாக ஏசா தன் மருமக்களைக் கொல்லமாட்டானென்று நினைத்தான். இருப்பினும் அவனால் ஒன்றும் முடியவில்லை. ஒரு மனிதனை எப்படி பிடிக்க வேண்டுமென்று தேவனுக்கு தெரியும். யாக்கோபு ஆற்றைக் கடந்தான். அங்கு அவன் முழங்காற்படியிட்டான். அதற்கு முன்பு

சற்று நாணமுள்ளவனாக இருந்தான். 'யாக்கோபு' என்பதற்கு 'எத்தன்' என்று பொருள்; அவன் எத்தனாக இருந்தான். ஆனால் ஏதோ ஒன்று அவனுக்கு சம்பவிக்க வேண்டியதாயிருந்தது. அவனுக்கு முன்பாக மரணம் படுத்துக்கிடப்பதை அவன் கண்ட போது, அவன் பதறினான்.



61. இங்கு அமர்ந்திருக்கும் அநேக ஆண்கள், பெண்கள் முன்னிலையில் மரணம் ஒருக்கால் படுத்துக் கிடக்கலாம். அதை அகற்ற வேண்டுமானால், அதற்கான ஒரே வழி பதறல் கொண்டு அவரிடம் வருதலேயாகும். "இன்றிரவு அதை நான் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுதே பெறவேண்டும். இல்லையேல் எனக்கு விமோசனம் இல்லை". நாளை என்றால் தாமதமாகியிருக்கும். இப்பொழுதே அதை நான் பெற்றுக் கொள்ளவேண்டும் நீங்கள் அடையாளமாகிய பரிசுத்த ஆவியின்

அபிஷேகத்திற்காக ஜெபம் செய்யும்போது, "ஆண்டவரே, நான் சென்று முயற்சி செய் வேன். ஆனால் எனக்கு சிறிது களைப்பாயுள் ளது" என்று கூறாதீர்கள். அப்படியானால் நீங்கள் உங்கள் இருக்கையிலேயே அமர்ந்து கொண்டு. எவ்வித முயற்சியும் செய்ய வேண்டாம். "நான் ஜெப வரிசையில் சென்று எண்ணெயை என் தலையில் பூசிக் கொள் வேன். அதனால் ஏதாவது உபயோகமுண்டா என்று பார்க்கலாம்" என்று கூறுவீர்களானால் அந்த பதறும் நிலைக்கு வரும் வரைக்கும் உங்கள் இருக்கைகளிலேயே அமர்ந்திருப்பது நல்லது. மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையே யுள்ள அந்த பதறும் நிலைக்கு முழு சபையுமே வரவேண்டும். இப்பொழுதே பெற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையேல் மடிந்து போக வேண்டும் என்னும் நிலைக்கு நீங்கள் வரும் போது, தேவன் அங்கு வந்து கிரியை செய்கிறார். தேவனை அங்கு கொண்டு வருவதற்கு பதறல் அவசியமா யுள்ளது.

62. யாக்கோபு என்றும் இல்லாத அளவுக்கு கதறினான். அவன் தேவனைப் பிடித்துக் கொள்ளும் வரை, அவனுடைய கலக்க நிலையில் அவரை கூப்பிட்டான். பதினைந்து நிமிடங்கள் மாத்திரம் அவன் அவருடன் போராடவில்லை; அவரைத் தன் ஆத்துமாவில் இருத்திக் கொள்ள அன்றிரவு முழுவதும் அவருடன் போராடினான். அப்படி செய்தும் கூட அவன் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றுணர்ந்தான். ஆசீர்வாதம் பெறும் வரை அவன் அவரை இறுகப் பற்றிக் கொண்டான்; அதுவரை அவன் அவருடன் தீவிரமாய் போராடினான். கர்த்தர் அங்கு வந்தார். அவன், "நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்று கலக்க நிலையில் அவரிடம் கூறினான். அப்பொழுது அவன் மேல் ஆசீர்வாதம் இறங்குவதை அவன் உணர்ந்தான்... அநேகர், "தேவனுக்கு மகிமை, நான் இப்பொழுது பெற்றுக் கொண்டுவிட்டேன்" என்கின்றனர். நீங்கள் அங்குதான் ஏமாந்து விட்டீர்கள் ஆமாம்!

சிலர் சகோ. பிரான்ஹாமே, “எனக்கு நல்லுணர்வு தோன்றுகிறது. நான் அங்கு ஜெபித்தேன். ஒரு நடுக்க உணர்ச்சி எனக்குள் தோன்றினது...” என்கின்றனர். ஒருக்கால் அது தேவனாயிருக்கலாம். “எனக்கு முன்னால் ஒரு பெரிய வெளிச்சத்தைக் கண்டேன்” எனலாம். அதுவும் ஒருக்கால் தேவனாயிருக்கலாம். ஆனால் அதைக் குறித்து இப்பொழுது நான் கூற வரவில்லை.



63. எபிரேயர் 6-ம் அதிகாரத்தில் வேதம், “மழை நீதியுள்ளவர் மேலும் அநீதியுள்ளவர் மேலும் பொழிகின்றது” என்று கூறுகிறது

(மத்.5:45 - தமிழாக்கியோன்). (சகோ. பிரான்ஹாம் பீடத்தை ஏழு முறை தட்டுகிறார் - ஆசி) நீங்கள் கோதுமையையும் களை யையும் வயலில் வையுங்கள். உண்மையில் மழை கோதுமைக்காகவே அனுப்பப்படுகின்றது. ஆனால் அது களைகளின் மேலும் விழுகின் றது, மழை பெற்றதனால், கோதுமை பயிர் போலவே களைகளும் மகிழ்ச்சியடைகின்றன. அதே பரிசுத்த ஆவி அவிசுவாசியின் மேலும் விழுந்து, விசுவாசியைப் போலவே அவனை நடக்கச் செய்யும். ஆனால் அவர்களுடைய கனிகளினால் அவர்கள் அறியப்படுகின்றனர். அதைக் குறித்துதான் நான் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறேன்; அதுதான் 'அடையாளம்' (Token)

64. யாக்கோபு பதறல் கொண்டு, "நான் உம்மைத் தொட்டு உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். நீர் என்னோடு இருக்கிறீர். ஆனாலும் நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்றான். சிலர் முதல் உணர்ச்சி தோன்றினவுடனே நல்லது என்று நினைத்து, மேலும் கீழும் குதித்து, பீடத்திற்குச் செல்லும் வழியில் ஓடி, "நான்

பெற்றுக் கொண்டேன். நான் பெற்றுக் கொண்டேன்" என்கின்றனர். ஓ, இல்லை, இல்லை! அவனை வித்தியாசமான ஆளாக்க ஏதோ ஒன்று நிகழும் வரைக்கும் அவன் அதிலே நிலைத்திருந்தான். அவன் மேற்கொள் ளும் வரை அதில் நிலை நின்றான் என்பதாக வேதம் கூறுகின்றது. ஒரு மனிதன் எங்ஙனம் தேவனை மேற்கொள்ள முடியும்? உங்களால் முடியும். உங்களால் முடியும். ஒரு மனிதன் தேவனை மேற்கொள்ள முடியும்.

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. நன்றி.*

# உங்களுக்கு என்ன தேவையோ அதற்காக நீங்கள் அழுது மன்றாடுங்கள். நீங்கள் மன்றாடி கேட்கத்தான் அவர் விரும்புகின்றார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: கடைசி காலத்திற்கென்று தேவனால் அருளப்பட்ட வழியை ஏற்றுக் கொள்ளுதல், ஜனவரி 15, 1963

172. நான் இன்னும் வேறொரு காரியத்தை கூற விரும்புகிறேன். உங்களுக்கு தெரியும், ஒரு குழந்தைக்கு ஒன்று தேவைப்படுமெனின் அழுவதைத் தவிர வேறு எந்த ஒரு வழியையும்

விஞ்ஞானப்பூர்வமாக அவர்களால் எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த குழந்தை உறுமும்படிக்கு அதற்கு உங்களால் கற்பிக்க முடியாது என்று உங்களுக்கு தெரியும். அது வேக வேகமாக பேசவும் அக்குழந்தைக்கு அவர்களால் கற்று தர முடியாது. ஆனால் அது தனக்கு தேவைப்படுவதை பெற்றுக் கொள்ள என்ன செய்கிறது தெரியுமா? அது தேவனால் தனக்கு அருளப்பட்டிருக்கின்ற வழியை எடுத்துக் கொள்கின்றது. அது கூச்சலிட்டு அழுகின்றது, கால்களை உதைக்கின்றது, தனக்கு தேவையானதை பெற்றுக் கொள்ளும் வரைக்குமாக கூச்சலிடுகிறது. பாருங்கள்? அது சரியே. அதற்கு இருக்கின்ற ஒரே வழி, அதன் தேவையைப் பெற்றுக் கொள்ள அழுவதுதான். தேவனால் அருளப்பட்ட ஒரு வழியைக் காட்டிலும் அதை விட சிறந்த ஒரு வழியை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

அது சரியே, அதை அப்படியே விட்டு விடுங்கள். அந்த இயற்கையான காரியங்கள்....



173. நான் ஜெர்மனியில் சிறிது காலத்திற்கு முன்னர் தங்கினேன். ஒரு பெரிய மக்கள் கூட்டத்தினரிடமாக பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் "ஜெர்மானியர்களே உங்களுக்கு என்ன ஆயிற்று? உங்களுக்கு தெரியுமா, நான் தெருவில் வந்து கொண்டிருந்த போது, ஒரு நாய் குரைத்தது. அது ஆங்கிலத்தின் குரைத்தது" என்றேன். மேலும் நான், "சற்று நேரத்திற்கு முன்னர், ஒரு காரில் இருந்த தாய் தன் குழந்தையை அமைதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தாள். அக்குழந்தை அழுது கொண்டிருந்தது, அது ஆங்கிலத்தில் அழுதது, என்றேன். நான் "நாம் ஏன் காரியங்களைக் குறித்து குழுப்பமுற்று தடுமாறிக் கொண்டிருக்கின்றோம்? பாருங்கள்? அவை எல்லாம் தேவனால் அருளப்பட்ட வழியில் சென்று கொண்டிருக்கின்றன. நாம் எல்லாருமே பாபேல் கோபுரத்திலிருந்து

வந்திருக்கிறோம். உங்களுக்கு புரிகின்றதா, நாம் எல்லாரும் குழப்பமுற்று தடுமாறுகிறோம்" என்று கூறினேன். அது சரியே!

174. அது தேவன் அளித்துள்ள வழியே தன்னுடைய சிறந்த வழி என்று அறிந்திருக்கின்றது.



ஒரு குழந்தை தனக்கு தேவையாயிருக்கின்றதை பெற்றுக்கொள்ள இருக்கின்ற வழி அழுவதே தவிர வேறு எந்த சிறந்த வழியும் அக்குழந்தைகளுக்கு தெரியாது. "மிக சத்தமாக அழுகின்ற குழந்தை தான் சிறப்பான கவனிப்பைப் பெறும்" என்று டாக்டர் பாஸ்வர்த் கூறுவது வழக்கம். அதற்கான வழி அதுவே ஆகும்.



175. தேவனுடைய பிள்ளைகளுக்கு அவ்விதம் தான். அதற்கும் இணையொத்தான ஒன்றை நான் உங்களுக்கு காண்பிக்க கூடும். ஒரு மனிதன் மேடையின் மேல் வருகிறான், தன் வாயில் தொடர்ந்து மெல்லும் பசையை, சிவிங்கம் (chewinggum) மென்று கொண்டு வருகின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவன் வந்து "பிதாவே, இன்றிரவு நான் இங்கே

இருக்கிறேன் என்று உங்களுக்கு தெரியும். நீர் எனக்கு பரிசுத்த ஆவியை கொடுக்க உமக்கு விருப்பமானால், சரி பரவாயில்லை. நான் இங்கே இருக்கிறேன். நீர் என்னை சுகமாக்க விரும்பினால். நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். ஆனால் உமக்கு அதை செய்ய விருப்பமில்லை என்றால், சரி தான், அதனால் பரவாயில்லை என்றால், என்ன, அதனால் பரவாயில்லை. கர்த்தாவே அது உம்முடைய சித்தம்" என்று கூறுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவர் வேதாகமத்தில் சித்தத்தை தெளிவாக இங்கே எழுதி வைத்துள்ளார். "இது உம்முடைய சித்தம் கர்த்தாவே." சரி சரியாக இங்கே, இது அவருடைய சித்தம் தான். "நான் அதை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது உமக்கு விருப்பமானால், நான் அதை பெற்றுக் கொள்ளட்டும். ஆனால், இருந்த போதிலும் உமக்கு விருப்பமில்லை என்றால், சரிதான், அதனால் பரவாயில்லை"

என்பாயாகில் நீ அதை ஒருபோதும் பெற்றுக் கொள்ளவே மாட்டாய்.



176. அக்குழந்தைகளில் ஒன்று அழட்டும், பட்டி ராபின்சன் (Buddy Robinson) செய்தது போல, பட்டி ராபின்சன் சோள வயலின் நடுவில் நின்றார். தன் கோவேறு கழுதையைக் கட்டினார். பிறகு அவர் “கர்த்தாவே, நீர் எனக்கு பரிசுத்த ஆவியை அளிக்கவில்லை என்றால், நீர் திரும்ப வரும் போது இங்கே எலும்புகள் குவியல் கிடப்பதை நீர் காண்பீர். நான் அதைப்

பெறும் வரைக்கும் இங்கேயே இருக்கப் போகிறேன்" என்று கூறினார். அதுதான் காரியத்தில் நிலைத்திருப்பதாகும்.



177. தேவன் எப்போதுமே தம்முடைய ஜனங்களுக்கு தம்முடைய விசுவாசிக்கின்ற பிள்ளைகளுக்கு பரிந்துரைப்பது என்னவென்றால், அவர்கள் எப்போதுமே தாம் அளித்துள்ள வழியில் செல்ல வேண்டும் என்பதேயாகும். அதுதான் தேவன் தம்முடைய பிள்ளை தாம்

அளித்துள்ள வழியிலே செல்ல வேண்டும் என்பது அவருடைய உள் கருத்தாகும், அவர் பரிந்துரை செய்வதும் அதுவே ஆகும். உங்களுக்கு என்ன தேவையோ அதற்காக நீங்கள் அழுது மன்றாடுங்கள். நீங்கள் மன்றாடி கேட்கத்தான் அவர் விரும்புகின்றார்.

178. பேதுரு தண்ணீரின் மேல் நடக்க புறப்பட்டு நடக்க ஆரம்பித்த போது, அவன் தான் சரியாகத் தான் சென்று கொண்டிருக்கிறேன் என்று நினைத்தான். “இதோ பார் நான் எவ்வளவு பெரிதான ஒன்றை செய்து கொண்டிருக்கிறேன். நான் எவ்வளவு பெரியவன் பார்?” என்று நினைத்த மாத்திரத்தில் அவன் மூழ்க ஆரம்பித்தான். “ஓ, அது தோல்வியுற்றது என்று நான் யூகிக்கிறேன்” என்று அவன் கூறவில்லை. கீழே சென்றான், சிறு சிறு நீர் குமிழிகள், (bubbles, பப்பிள்ஸ்) மேலே

வந்தன, எல்லாம் முடிந்து விட்டது என்பதா, பாருங்கள்? அப்படி இல்லை.



179. அவன் “ஆண்டவரே, என்னை இரட்சியும்” என்று கதறினான். ஆமென்.

அப்பொழுது அந்த நித்திய கரமானது கிழே இறங்கி அவனை தூக்கி நிறுத்தியது. ஏன் அப்படி? அவன் கதறி அழைத்தான்.

180. இது தான் சபையிடம் உள்ள பிரச்சனையாகும். நாம் அப்படியே அங்கே நீண்ட நேரம் தரித்திருப்பதில்லை. நாம் நீண்ட நேரத்திற்கு கதறி அழுவதில்லை. நாம் அதை அப்படியே பிடித்திருப்பதில்லை. ஒரு சிறு குழந்தைக்கு ஒன்று தேவைப்படுமானால், அது காலை உதைத்து கதறி அழும், முகம் சிவக்கும் அளவுக்கு அழும். நாமோ நம் முகத்தில் உள்ள அது அதை எப்படி அழைப்பது, அது என்ன?, ஆம் மஸ்காரா (கண் இமையில் உள்ள முடிக்கு தடவும் வண்ணச் சாயம் - தமிழாக்கியோன்) நாம் அழுதோமானால் நம் முகத்தில் உள்ள மஸ்காரா கலைந்துவிடும் என்று பயப்படுகிறோம். அந்த வர்ணம் முகத்திலிருந்து கலைந்துவிடும் என்று

பயப்படுகிறோம். நீங்கள் தேவனிடமிருந்து ஒன்றை பெற வேண்டுமானால், எப்படியாயினும் அதை நீ எடுக்கத் தான் செய்வாய். ஆகவே, நீங்கள் அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். நீங்கள் உங்கள் மயிரை கலைத்துக் கொள்வீர்கள், ஆனால் அது எந்த ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்காது. இல்லை இல்லை ஐயா.



181. இப்பொழுது, நாம் ஏதோ ஒரு அறிவுப்பூர்வமான சொற்பொழிவைக் கொண்டு அவரிடமாக வர வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்ப்பதில்லை. நான் இரட்சிக்கப்பட முயற்சித்த போது நானும் அப்படியாக செய்ய முயற்சித்தேன் என்பதை நான் நினைவு கூறுகிறேன். நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதி அதனை காட்டில் வைக்க இருந்தேன். ஏனென்றால் அவர் காட்டிற்குள் வந்து என்னிடமாக கூறுவார் என்று அறிந்திருந்தேன், நான் என்னைக் குறித்து வெட்கப்படுகிறேன் என்று அவரிடம் கூறவும் இருந்தேன். ஆனால் அதைச் செய்ய எனக்கு விருப்பமில்லை. அப்பொழுது அங்கே நான் சென்று ஜெபிக்கலாம் என்று போனேன். நான் "சற்று பார்ப்போம், மக்கள் தங்கள் கரங்களை இப்படியாக வைத்ததை நான் ஒரு சமயம் படத்தில் இருந்ததை கண்டேன். திரு. இயேசு அவர்களே, நீர்

மாத்திரம் ஒரு நிமிடம் இங்கே வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உம்மிடம் ஒரு நிமிடம் பேச விரும்புகிறேன் நீர் பேச நான் காத்திருக்கிறேன்" என்றேன். ஒன்றுமே வரவில்லை. "ஓ நான் தவறாக செய்து விட்டேன். சரி திரு இயேசு அவர்களே, ஒருக்கால் நான் இப்படியாக செய்ய வேண்டியவனாக இருக்கிறேன் போல. திரு இயேசு அவர்களே, நீர் வந்து எனக்கு உதவி செய்வீரா? நான் ஒரு பாவி. நான் உம்மிடம் பேச விரும்புகிறேன்" என்று கூறினேன். எனக்கு... "தேவன் என்னிடம் பேசினார்" என்று மக்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். நான் "திரு. இயேசு அவர்களே, நீர் இங்கே வருவீரா? நான் உம்மிடம் பேச வேண்டும்" என்று கூறினேன்.

182. ஆனால், அப்பொழுது பிசாசு அங்கே காட்சியில் வந்தான். அந்த

விதமாகத் தான் அவன் செய்வான். அவன் உன்னிடமாக, "உன் முழங்கால்கள் வலிக்கின்றதே, நீ கேட்க வேண்டிய அவசியம் இல்லை. பார், நீ சற்று பொறுத்திரு. நாளை இரவு அதைப் பெற்றுக் கொள்" என்று கூற முயற்சிப்பான். நீங்கள் தயாராக இல்லையெனில் அப்பொழுது அவன் உங்களை சுற்றி சுற்றி வருவான். அப்பொழுது அவன் என்னிடமாக.. ஆனால் எப்பொழுதுமாக, அவன் கூறுவதை, அவன் கூறுவதை கொண்டு நீங்கள் ஒரு அனுகூலமான சூழ்நிலையை உங்களுக்கு உருவாக்கிக் கொள்ளுங்கள் அதை ஒரு பிரயோஜனமான ஒன்றாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

183. அவன் என்னிடமாக "என்ன என்று உனக்குத் தெரியுமா? உனக்கு ஏற்கெனவே பத்தொன்பது அல்லது இருபது வயதாகி விட்டது. உனக்கு

ஏற்கெனவே இருபது வயதாகி ஆகிவிட்டது. நீ மிக நீண்ட காலமாக காத்திருக்கிறாய்" என்று கூறினான்.



184. அப்பொழுது நான், "ஓ தேவனே, நான் நீண்ட காலம் காத்திருந்து விட்டேன். கர்த்தாவே, நீர் நான் கூறுவதை கேட்காவிட்டாலும் சரி, எப்படியாயினும் நான் உம்மிடமாக கூறப் போகிறேன். நான் எப்போதுமே இதை செய்ய விரும்பினேன்" என்று கூறினேன். ஓ, சகோதரனே, அது

அவரை காட்சியில் கொண்டு வந்தது. பாருங்கள்?

185. அந்த விதமாகத்தான், அந்த வழியில் தான் அவரை காட்சியில் கொண்டு வர முடியும். நீங்கள் ஒரு குழந்தை மாத்திரமே. அதற்காக சத்தமிட்டு ஓயாமல் அழு, அழு.



186. ஏதோ ஒன்றை, வேறு ஏதோ ஒன்றை அல்லது ஏதோ ஒரு பெரிய எழுதப்பட்ட ஒரு ஜெபத்தை ஒரு மணி

நேரம் அல்லது இரண்டு மணி நேரம் உச்சரிக்க ஒத்திகை செய்து விட்டு ஜெபத்தை கூற முயற்சிக்காதே. அது எந்த ஒரு நன்மையும் அளிக்காது.



187. அவர்கள் கூறும் விதமாக "நீங்கள் அந்த ஜெபத்தை கூறிவிட்டாயா?" என்று கேட்கின்றனர். இல்லை. அவ்விதமாக கூறுவது ஒரு பாவம் ஆகும். நீங்கள் ஜெபியுங்கள். ஏதோ ஒன்றை கூறாதீர்கள். ஜெபியுங்கள். "எனக்காக ஒரு ஜெபத்தை சொல்லுங்கள்"

188. நான் “அதை எனக்கு செய்யாதீர்கள். எனக்காக நீங்கள் ஜெபம் செய்யலாம். ஆனால் எந்த ஒரு ஜெபத்தையும் எனக்காக உச்சரித்து சொல்லாதீர்கள்” என்றேன். அப்படி வேண்டாம் ஐயா, வேண்டாம். நீங்கள் ஜெபம் செய்யும் போது எனக்காக ஜெபிக்க மாத்திரம் செய்யுங்கள். சரி.



189. உங்கள் தேவைகளுக்காக ஓயாமல் வேண்டுங்கள் (cry). அது தான் தேவன் வைத்துள்ள வழியாகும். அந்த அநீதியுள்ள நியாயாதிபதி தன்னை நோக்கி இரவும் பகலும் ஓயாமல் கூப்பிட்ட பெண்ணைக் குறித்து இயேசு விவரித்தார் அல்லவா. அப்படியானால் பரிசுத்த ஆவி தங்களுக்கு வேண்டும் என்று தம்மை நோக்கி இரவும், பகலும் ஓயாமல் வேண்டிக்கொள்கின்றவர்களுக்கு எவ்வளவாக பரலோகப் பிதா அளிப்பார். நாடித் தேடுங்கள், தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருங்கள். தட்டுங்கள், தொடர்ந்து தட்டிக்கொண்டே இருங்கள். அவர் திறக்கும் வரை தொடர்ந்து அப்படியாக செய்து கொண்டே இருங்கள். அதனுடனே அப்படியே தரித்திருங்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தையானது உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக ஓயாமல் வேண்டுங்கள்

(Cry), அப்பொழுது நீங்கள் பெறுவீர்கள். அதற்கு பின் நீங்கள் அதைக் குறித்து கவலை கொள்ள வேண்டியதில்லை. வேதம் அதை வாக்குத்தத்தம் செய்துள்ளது என்பதைப் பாருங்கள். பிறகு அதிலே அப்படியே தரித்திருந்து, நீங்கள் அதைப் பெறும் வரைக்கும் ஓயாமல் வேண்டுங்கள் (cry).



190. ஒரு சிறு குழந்தை பிஸ்கட்டைப் பார்த்து, அதை பெற விருப்பம்

கொள்ளுமானால், அது உடனே அழ ஆரம்பிக்கும், அழுது கொண்டே இருக்கும், அழுது கொண்டே இருக்கும் காலால் உதைக்கும், கூச்சலிடும், சத்தமிடும், முகம் சிவந்து போகும். அப்பொழுது அதன் தாய் ஒரு பிஸ்கட்டை கொடுப்பார்கள். உடனே எல்லா அழுகையும் நின்றுவிடும். பாருங்கள்? அக்குழந்தை தான் பார்த்ததை பெற்றுக் கொள்ளும், தான் விரும்பினதை பெற்றுக் கொள்ளும். நீங்கள் சாப்பிடுகின்ற ஐஸ் கிரீமை அக்குழந்தை நக்கி சாப்பிட விரும்புமானால், அதை பெற்றுக் கொள்ளும் வரைக்குமாக அது சந்தடி செய்து கொண்டே இருக்கும். பாருங்கள்?

191. ஆம், அந்த விதமாகத் தான் நாமும் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் ஒரு வாக்குத்தத்தத்தை நான் காண்பேனானால்,

அப்பொழுது நான் அதில் அப்படியே தரித்திருந்து, தேவன் அதை எனக்கு கொடுக்கும் வரைக்குமாக நான் ஓயாமல் வேண்டிக்கொண்டே இருப்பேன் (cry). அப்பொழுது அவர் செய்வார். தம் கரங்களிலிருந்து அதை உங்களுக்கு அளிப்பார்; நீங்கள் பாருங்கள், இயற்கைப் பிரகாரமாகவும் அப்படி இருக்கின்றது. ஆகவே நீங்கள் அவ்விதம் கேட்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நீங்கள் கேட்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். "அதிகமாக, கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்."

192. அவருடைய வார்த்தை உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக தொடர்ந்து ஓயாமல் (cry) கேட்டுக் கொண்டே இருங்கள். இப்பொழுது, நண்பர்களே, இன்னும் ஒரு நிமிடத்திற்கு

தொடர்ந்து பார்ப்போமாக. வார்த்தை உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக ஓயாமல் வேண்டுங்கள்.



193. தொல்லை என்னவென்றால், நாம் ஒரு பிஸ்கட்டைப் பெற்றுக் கொண்டு அவ்வளவு தான் இருக்கின்றது என்று நினைத்துக் கொள்கிறோம். ஆனால் மேஜை முழுவதுமாக ஆகாரம் இருக்கின்றதே. நாம் அந்நிய பாஷையில் பேசி விட்டு, “ஓ, சகோதரனே,

அவ்வளவுதான்" என்று கூறிவிடுகிறோம். ஓ, இல்லை . அப்படி இல்லை. அது அந்த காரியத்தில் கொஞ்சம் தான். ஆம். "ஓ, நான் போதுமான அளவிற்கு சந்தோஷமடைந்தேன். கூச்சலிட்டேன்." அப்படி செய்வது இன்னும் சற்று கூடுதல் தான். ஆனால் இன்னும் நிறைய அதில் இருக்கின்றதே, தொடர்ந்து ஓயாமல் வேண்டிக் கொண்டே இருங்கள். அது கிடைக்கும் வரைக்குமாக..



194. அதுதான் தேவன் தம்முடைய மக்களுக்கு அளித்துள்ள வழியாகும். தேவன் அளித்துள்ள வழி என்னவென்றால் அவருடைய வார்த்தையை எப்போதுமே எடுத்து, அதை அப்படி பிடித்து அது உங்களுக்கு உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக அப்படியே அதைப் பிடித்திருத்தல் ஆகும். இப்பொழுது, நான் கூறுவது புரிகின்றதா? தேவன் அளித்துள்ள வழி என்னவென்றால், வாக்குத்தத்தமானது உங்களுக்கு வெளிக் கொணரப்பட்டு அளிக்கப்படும் வரைக்குமாக அதை அப்படியே பற்றிப் பிடித்துக் கொண்டிருத்தல் ஆகும்.

★★★★★

# ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும் ஊழியக்காரன் செயல்பட முடியாது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# லூக்கா 10:2

**அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.**

*செய்தி:* 61-1112 - **கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்** - Jeffersonville, Indiana, USA

73. அவர்கள் அனைவரும் அந்தப் பெண்ணத்தை உடைத்தெறிந்து விட்டு, "நாங்கள் கோட்பாடுகளையும், எங்கள் பிரமாணப் புத்தகத்தி லுள்ளவைகளையும் மறந்துவிட்டு, கர்த்தருடைய வார்த்தைக்கு திரும்புகிறோம்" என்று கூறுவார்

களானால், அப்பொழுது என்ன நடக்கிறதென்று பாருங்கள். தேவன் அவர்கள் மத்தியில் ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார். அவர் நிச்சயம் அப்படி செய்வார். **அவர்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்தால், தீர்க்க தரிசியை தேவன் அவர்களிடம் அனுப்புவார். முதலாவதாக அவர்கள் ஜெபிக்க வேண்டும். தேவன் அதற்காக காத்திருக்கிறார். ஜனங்களுக்கு அதில் ஒரு பங்கு இருக்க வேண் டும் என்று தேவன் விரும்புவது விசித்திரமல்லவா? இயேசு அறுப் புக்கு ஆயத்தமாயிருந்த பயிர்களைக் கண்டபோது, "அறுப்புமிகுதி, வேலை யாட்களோ கொஞ்சம். நீங்கள் அறுப் புக்கு எஜமானை வேண்டிக் கொள்ளுங் கள் (அது அவர்), அறுப்புக்கு வேலை யாட்களை அனுப்பும்படி என்னிடம் வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார்.** (மத். 9:37-38). **நீங்கள் ஏற்க வேண்டிய ஒரு**

பாகமும் அதில் உண்டு. தேவன் தம்முடைய சபை அவரை நோக்கிக் கூப்பிடுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார். அவர் எக்காலத்தும் அவ்வாறே செய்து வந்திருக்கிறார். தமது ஊழியக்காரனை செயல்படுத்த, ஜனங்கள் தம்மை நோக்கிக் கூப்பிட வேண்டுமென்று தேவன் இன்று காத்துக் கொண்டிருக்கிறார். ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும் ஊழியக்காரன் செயல்பட முடியாது. இஸ்ரவேல் ஜனங்கள் முகங்குப்புற விழுந்து, தங்களை மீட்க ஒருவனை அனுப்ப வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணின வரைக்கும். அவர்களால் அற்புதங்களும், அடையாளங்களும் நடப்ப

**தைக் காண முடியவில்லை.** தேவன் அவர்களை மீட்பதற்கென ஒருவனை வைத்திருந்தார். **இஸ்ரவேல் ஜனங்கள் ஜெபம் பண்ணும் வரைக்கும், தேவன் ஒரு தீர்க்கதரிசியை வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் வைத்திருந்து அதற்காக காத்திருந்தார். அவர்கள் ஜெபம் பண்ணத் தொடங்கின வுடனே, தேவன் மீட்பனை அனுப்பினார். இன்றைக்கும் ஜனங்கள் ஒன்றுகூடி ஜெபம் செய்வார்களானால், தேவன் அதையே செய்வார்.** சரி! எலியா அந்த கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், ஆகாபுக்கும். அவன் தேவனுடைய ஊழியக்காரன் என்னும் அடையாளமாயிருந்தான். அவன் தேவனுடைய தீர்க்கதரிசி. அவன் விருப்பப்படி அவனால் வானத்தை திறக்கவும், முடவும் முடியும் என்பதன் மூலம் அவன் இஸ்ரவேலுக்கு அடையாளமாயிருந்தான். அவன் நிச்சயம் அப்படியிருந்தான். வானத்தை முடக்கூடிய ஒருவரை எனக்குக் காண்பியுங்கள் பார்க்கலாம். தேவனைத்

தவிர வானங்களைத் திறக்கக் கூடிய ஒருவரை எனக்குக் காண்பியுங்கள் பார்க்கலாம். தேவனு டைய வார்த்தை - தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசிகளிடத்தில் உள்ளது.

# முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இப்பொழுது, அவன் ஒருநாள் அங்கே வெளியில் உட்கார்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டுகொள்கிறோம். நாம் இதை ஒரு சிறு நாடகமாகக் கொடுப்போம், அப்போது இங்கேயிருக்கும் இந்தச் சிறு பிள்ளைகள் அதை தெளிவாகக் கேட்க முடியும். இப்பொழுது, ஆபிரகாம் ஒரு காலையில் கூடார வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அங்கே அவனுடைய இடத்திற்கு முன்பு, ஒரு பெரிய சிந்தூர மரம் (oak tree) இருந்தது. அந்த கருவாலி மரம் (oak) இன்னும் அங்கே நிற்பதாக அவர்கள் உரிமை கோருகிறார்கள். அவர்கள் அதை பாதுகாக்கப்பட்ட இடமாக (preserved) வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். நல்லது, அங்கே தான் அவன் தன்னுடைய கூடாரத்தை அடித்திருந்தான், அங்கே வெளியே வனாந்தரத்தில்... லோத்துவோ அங்கே கீழே இருந்தான், என்னே, அவர்கள் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை உடையவர்களாக இருந்தார்கள் என்று ஊகிக்கிறேன், அவன் புகைப்பிடிப்பதற்கான ஒரு பெரிய சுருட்டை (cigar) வைத்திருந்தான், மேலும் அவன் அந்தப் பட்டணத்தின் பெரு நகராண்மைக் கழகத் தலைவராக (mayor)

இருந்தான், உங்களுக்குத் தெரியும். திருமதி. லோத்தும் அவளுடைய குமாரத்திகளும் மற்றும் அவர்கள் எல்லாருமே புதுப்பாணி நாகரிக நடை, உடை பாவனைகள் கண்காட்சிகள் (fashion shows) நடக்கும் பல இடங்களுக்குப் போய்க்கொண்டும், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும், அந்நாட்களின் பாணிகளுக்குப் (styles) பின்னால் ஒப்பனை செய்து (அழகுபடுத்திக்) கொண்டும், இருந்தார்கள். **ஆனால் சாராளோ உண்மையாக நின்றாள்; ஆபிரகாமும் உண்மையாக நின்றான்; அவர்கள் தேவனோடு தரித்திருந்து, அங்கே வெளியில் தங்கியிருந்தார்கள்.**

35. இப்பொழுது, என்ன சம்பவித்தது? ஒருநாள் ஆபிரகாம் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஏறக்குறைய பகல் பதினொரு மணியளவில், நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அவன் அங்கே அதனூடாக ஏறி வந்து கொண்டிருப்பவர்களை நோக்கிப் பார்க்கிறான், இதோ மூன்று மனிதர்கள், தங்கள் வஸ்திரங்கள் முழுவதும் தூசி படிந்தவர்களாக, நெடுக நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதைக் குறித்து ஏதோவொன்று உள்ளது என்று உங்களுக்குத் தெரியும், **நீங்கள் முழுவதுமாக ஜெபித்து முடித்துவிடாமல் இருப்பீர்களானால் *(prayed up)*, தேவனுடைய ஆசீர்வாதமானது சரியாக உங்கள் பக்கத்திலேயே கடந்து போக முடிந்தாலும், அதை அறியாமலே இருப்பீர்கள்.** நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், **முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

சமீபத்தில் ஐயர்லாந்திலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறு ஐரிஸ் பெண்மணி அங்கே இருந்தாள், அவள் ஒரு கப்பலில் இருந்ததாக அவர்கள் கூறினார்கள் மேலும் அவள்... ஏறக்குறைய அந்நேரத்தில், ஓ, அவர்கள் ஏறக்குறைய நியூயார்க்குக்கு வந்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு பெரிய கடும் புயலானது அந்த சமுத்திரத்தின் குறுக்கே வீசியடித்தது, கப்பலானது இக்கட்டில் இருக்கிறது என்ற சமிக்கையையும் (SOS's) வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார்கள், அதுவோ தண்ணீரில் தலைகீழாகப் பாய்ந்து இடத்திற்கிடம் மூழ்கிக் கொண்டேயிருந்தது. அப்போது இசைக்

கருவிகளை இசைக்கும் கூட்டம் இசைத்துக் கொண்டிருந்தது; அவர்களால் முடிந்த எல்லா ராக்-அன்-ரோல்களையும், மற்றும் அதைப் போன்ற எல்லாவற்றையும் அவர்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொடங்கினார்கள் - இசைக்குழு இசைக்கத் தொடங்கினது... அப்போது கப்பல் தலைவன் (Captain), "எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்; நீங்கள் உங்கள் சபையில் ஜெபிக்கிற விதமாக எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்" என்றான். உடனே பாண்டு இசைக் கருவிகள் "உம்மண்டை, என் தேவனே" என்று இசைக்கத் தொடங்கினது. அவர்கள் எல்லாரும் அவ்வாறு செய்யத் தொடங்கினார்கள்.

36. ஒரு சிறு ஐரிஸ் பெண்மணியோ தரையில் மேலும் கீழும் நடக்கத் தொடங்கினாள். அந்த கேப்டன், "நம்மால் மாத்திரம் இந்தப் புயலுக்கு முப்பது நிமிடங்கள் தாக்குப்பிடிக்கக் கூடுமானால், நாம் துறைமுகத்திற்குள் வந்து, நங்கூரத்தை போடுவோம். ஆனால் நம்மால் முப்பது நிமிடங்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், நாம் கடலின் அடியில் இருப்போம்" என்றான்.

அந்தச் சிறு ஐரிஸ் பெண்மணியோ, "தேவனுக்கு மகிமை. அல்லேலூயா" என்றாள்.

எனவே கப்பல் தலைவன் (Captain) மேலே நடந்து வந்து, “சீமாட்டியே, நான் என்ன சொன்னேன் என்று புரிந்ததா?” என்று கேட்டான். அவன்...

அவள், “நீர் சொன்னது எனக்குத் தெளிவாகப் புரிந்தது, ஐயா” என்று சொன்னாள்.

அவன், “நம்மால் இந்தப் புயலில் முப்பது நிமிடங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில் நாம் கடலின் கீழே இருக்கலாம் என்று தான் சொன்னேன்” என்றான்.

அதற்கு, “நீர் என்ன அர்த்தத்தில் (சொன்னீர்) என்பது எனக்குப் புரிந்தது. அல்லேலூயா. தேவனுக்கு துதி உண்டாவதாக” என்றாள்.

“நீங்கள் ஏன் ஜெபிக்கவில்லை?” என்று கேட்டான்.

அதற்கு அவள், “நான் முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up). இனியும் ஜெபிக்க வேண்டியதில்லை. நான் துவக்க முதலே முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up)” என்று கூறினாள்.

நல்லது, “நீங்கள் கடலின் அடியில் இருக்கலாம் என்று அறிந்திருந்தும், நீங்கள் ஏன் அவ்விதமாக அல்லேலூயா என்று கூற முடிந்தது?” என்று கேட்டான்.

அதற்கு அவள், “ஐயா, நான் நியூயார்க்கில் வசிக்கும் என்னுடைய ஒரு மகளைக் காண, ஐயர்லாந்திலிருந்து வரும் என்னுடைய பாதையில் இருக்கிறேன். எனக்கு ஒரு மகள் மகிமையில் இருக்கிறாள், ஒருவள் நியூயார்க்கில் இருக்கிறாள். நான் கீழே போவேன் என்றால், அங்கே மேலேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன். நாம் கரையைப் பிடித்து (land) விட்டோம் என்றால், அங்கேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன்” என்றாள். அது சரியே. முற்றிலுமாக ஜெபித்து முடித்து விடுதல் (Prayed up)… ஆமென். தரித்திருப்பதற்கான வழி அதுதான், முழுவதும் ஜெபிப்பது. அதற்காக ஆத்தமாகுங்கள். அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருத்தியை சந்திக்கப் போகிறாள். அது… என்று அவள் அறிந்திருந்தாள். அங்கே மேலேயோ அல்லது இங்கே கீழேயோ, அது எந்த வித்தியாசத்தையும் அவளுக்கு ஏற்படுத்தவில்லை, அது செய்தது - அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருவளைக் காணப் போகிறாள். இப்பொழுது, அது

நல்லது, அது அருமையானது. **சபையானது எல்லா நேரமும் அந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும், முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

37. **ஆபிரகாம் முழுவதுமாக ஜெபித்து முடித்து விட்டு, அங்கு வெளியே உட்கார்ந்திருந்தான்**. ஒருக்கால் லோத்து அங்கே கீழே இருந்து, அங்கே அந்த வனாந்தரத்திலே என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறியாதிருந்தான். ஆனால் ஆபிரகாம் நோக்கிப் பார்த்தபோது, அது சற்று வினோதமாக காணப்படுவதை அவன் அடையாளம் கண்டுகொள்ளும் வண்ணமாக, அங்கே வெளியே அதன் முன்பாக நடந்து வந்து கொண்டிருந்த அந்த மனிதரைக் குறித்து ஏதோவொன்றிருந்தது. ஓ, என்னே. வினோதமாக தோற்றமளிக்கும் மனிதர்... அவன் ஓடிச்சென்றான், நீங்கள் கவனிப்பீர்களானால், முதல் முதல் காரியத்திலேயே அவன், "என்..." என்றான். அவன், "என் ஆண்டவன்மார்களே" என்று கூறவில்லை. ஷரிவ்போர்ட்டில், அன்றொரு இரவு அந்த கருத்துக்குறிப்பைக் கூறின அந்த யூத

சகோதரனோடு நான் நிச்சயமாகவே முரண்படுகிறேன். “என் ஆண்டவன்மார்களே” என்று அவன் கூறவில்லை, ஆனால், “என் ஆண்டவரே (My Lord)” என்று தான் கூறினான், ஆ-ண்-ட-வ-ரே, ஒருவர். “என் (பெரிய எழுத்து) ஆ-ண்-ட-வ-ரே, நீர் உள்ளே வர மாட்டீரா.” இப்பொழுது, உங்களில் யாராவது அங்கு மொழிபெயர்ப்பாளரைக் கவனித்துப் பாருங்கள், அது ஏலோகிம் என்பதாக இருந்தது, ஆபிரகாம் அவரை அழைத்தான்... அவரை உள்ளே அழைத்து வந்தான். “நீர் உள்ளே வந்து உட்கார மாட்டீரா. நான் போய் உமக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து, உம்முடைய கால்களைக் கழுவுகிறேன். துணிக்கை அப்பமும் (morsel of bread) எடுத்துக்கொள்ளும். அதன்பிறகு நீர்... உமது-உமது வாஞ்சையைத் தீர்த்துக்கொள்ளும், பிறகு நீர் எங்குபோக வேண்டுமானாலும் அங்கே போகலாம்” என்று கூறிவிட்டு, அவன் அதனூடாக நழுவிச் சென்று, “சாராளே, சாராளே, ஸ்ஸ். யாரோ ஒருவர் அங்கே வெளியில் இருக்கிறார்; மிக சீக்கிரமாக கொஞ்சம் மாவையோ, அல்லது சோள மாவையோ (cornmeal) ஆயத்தம் செய்” என்று கூறுவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

# ~ 10 ~

*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*



# ஜெபித்து விட்டு (Prayed up), போக ஆயத்தமாகுங்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

151. ஐயர்லாந்தைக் கடந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறு ஐரிஸ் தாயாரை அது எனக்கு நினைவுபடுத்துகிறது. அவர்கள் தம்முடைய மகளைச் சந்திக்கும்படியாக, நியூயார்க்-கிற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில், அவர்கள் எங்கள் கப்பலைக் காப்பாற்றுங்கள் (SOS - Save Our Ship) என்ற ஒரு இக்கட்டு செய்தியை அனுப்பினார்கள், அந்தக் கப்பல் ஏறக்குறைய மூழ்கிக் கொண்டிருந்தது. அவர்களோ... அதில், அடித்தளத்தில் ஏதோவொருவிதமான ஆரவார இசைக்கூத்து இசையை இசைத்துக் கொண்டிருந்தார்கள், அவர்கள் எல்லாரும் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். கப்பல் கேப்டன், இன்னுஞ் சரியாகச் சொன்னால், கப்பல் தலைவன் கீழே இறங்கி வந்து, "எல்லாரும், ஒரு நிமிடம். உங்களுடைய இசையை மாற்றுங்கள். நம்மால் முப்பது நிமிடங்கள் தாக்குப்பிடிக்க முடியுமானால், நாம் அங்கு இருப்போம். நம்மால் தாக்குப்பிடிக்க

முடியவில்லை என்றால், நாம் கடலின் அடியில் (போகப்) போகிறோம்" என்றான்.

152. எல்லாருமே, அவர்கள் *உம்மண்டை, என் தேவனே,* என்பதை இசைக்கத் தொடங்கினார்கள், எல்லாருமே தரையில் விழுந்து, ஜெபிக்கத் தொடங்கினார்கள். சிறிய வயதான ஐரிஸ் தாயாரோ, இந்தவிதமாக சுற்றிலும் இணைக்கப்பட்டிருந்த ஒரு வஸ்திரத்தையும், அவர்களுடைய நீளமான சட்டை கைகளையும் உடையவர்களாக, அவர்கள், "மகிமை! அல்லேலூயா! அல்லேலூயா!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

153. ஏன், அந்த கப்பற்தலைவனோ, "அம்மையீர், உங்களுக்கு என்னவாயிற்று?" என்று கேட்டான்.

154. "நான் சந்தோஷமாயிருக்கிறேன்" என்று கூறினார்கள்.

155. "நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள். இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில், நாம் ஒருவேளை கடலின் அடியில் இருக்கலாம் என்று நான் சொன்னது உங்களுக்குத் தெரியுமா?" என்றான்.

156. “நீங்கள் சொன்னது எனக்குப் புரிந்தது” என்றார்கள்.

157. “நீங்கள் ஏன் ஜெபிக்கக் கூடாது?” என்றான்.

158. “நான் ஜெபித்துவிட்டேன் (prayed up), நான் ஜெபிக்க வேண்டியதில்லை” என்று கூறினார்கள். சரி. “நான் ஜெபித்துவிட்டேன். ஓ, மகிமை! கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!” என்றார்கள்.

159. “சீமாட்டியே, உங்களால் அதை எப்படி செய்ய முடிகிறது, நீங்கள் ஜெபித்து விட்டீர்களானால், நீங்கள் எதைக் குறித்து சத்தமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டான்.

160. “நல்லது, இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில், நாம் தாக்குப்பிடிப்போமானால், நாம் நியூயார்க்கில் இருப்போம் என்று நீர் கூறினீர்” என்றார்கள்.

161. “அது சரியே.”

162. “நாம் தாக்குப்பிடிக்காவிட்டால், நாம் கடலின் அடியில் இருப்போம்.”

163. "அது சரியே."

164. அவர்கள், "மகிமை! எனக்கு நியூயார்க்கில் ஒரு மகள் இருக்கிறாள், நான் (அவளைக்) காணத்தான் போகிறேன். நான்... நாம் தாக்குப்பிடிக்காமல் போனால், மகிமையில் எனக்கு ஒரு (மகள்) இருக்கிறாள், எனவே முப்பது நிமிடங்களில் (ஏதாவது) ஒரு மகளை நான் காணப் போகிறேன். அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்றாள்.

165. அந்தவிதமாகத்தான் நீங்கள் ஜீவிக்க விரும்புகிறீர்கள். அல்லேலூயா! சரி. ஜெபித்து விட்டு (Prayed up), போக ஆயத்தமாகுங்கள். ஆமென். தேவனால் அருளப்பட்ட பாதையில் நடந்து, எந்த நிமிடத்திற்கும் ஆயத்தமாக இருங்கள். ஆமென். நீங்கள் அவருடைய பிரசன்னத்தில் வரும்படிக்கு அவர் உங்களை எந்த நிமிடத்தில் அழைப்பார் என்று உங்களுக்குத் தெரியாது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

அந்த முகத்தை வரைய எந்த ஓவியனாலும் முடியாது. அது அதிகார தோரணையுடன் காணப்பட்டது. அவர் பேசுவாரானால், உலகம் முழுவுக்கு வந்து விடும் போல் காணப்பட்டது, ஆனால் அவருடைய கண்களில் இரக்கமும் தயவும் அன்பும் சுடர்வீசின

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**[1933-ம் வருடம் – அதாவது சகோதரன் பிரன்ஹாமுக்கு ஏறக்குறைய 24 வயதாகும் போது அவருடைய ஜீவியத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் சிலவற்றை இங்கு கொடுத்துள்ளோம். இது *இயற்கைக்கு மேம்பட்டவை – வில்லியம் பிரன்ஹாமின் ஜீவிய சரிதை (புத்தகம் – 2)* – லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இங்கு “பில்லி” என்று குறிப்பிடுவது “தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாமைக்” குறிக்கிறது.]**

---

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தத்தை அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய சிந்தைகளை வேதாகமத்தில் வரைந்து வைத்துள்ளார் என்றும் அதை அறிய வேதம் வாசித்து ஜெபிக்க வேண்டும் என்றும் பில்லியின் மேய்ப்பர் பிரசங்கிப்பதை அவர் கேட்டார். அது பில்லியைத் தொட்டது. எனவே அவர் ஆர்வமுடன் வேதம் வாசித்து, தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

அவர் பத்து வருடங்களுக்கு முன்பு தம்முடைய ஏழாம் வகுப்பு படிப்பை முடித்ததிலிருந்து அவர் அநேக புஸ்தகங்களை

வாசித்திருக்கவில்லை, எனவே அவருடைய வாசிக்கும் திறமை மந்தமாகத்தான் இருந்தது. வேதத்தின் பொதுவான அர்த்தங்கள் புரிந்தாலும், நேபுகாத்நேச்சார், செருபாபேல், பெனாயா போன்ற கடினமான பழைய ஏற்பாட்டு பெயர்களை அவரால் உச்சரிக்க இயலவில்லை. மேலும் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமத்திலுள்ள வாக்கிய அமைப்புகள் அவருக்கு பெரும் போராட்டமாக அமைந்தன. அவர் 1933—ம் வருடத்தின் தொடக்கத்தில் தம்முடைய முதலாவது செய்தியைப் பிரசங்கித்த போது, வேதாகமத்தை சத்தமாக வாசிக்க தம்முடைய நாவை அவர் நம்பவில்லை. அதற்குப் பதிலாக வேதபாகத்தை அவருக்காக வாசிக்கும்படி, மேடையில் அவருக்கு பின்பாக உட்கார்ந்து கொண்டிருக்கும் ஹோப்பையே (பிரன்ஹாமின் மனைவி) வற்புறுத்தினார். அதற்காக அவளுக்கு அவர் சைகை காட்டி தெரிவித்தார். அவருடைய பாடமானது *ஒழுக்கங்கெட்ட விதத்தில் ஜீவித்த சிம்சோனிடத்தில் தேவன் கொண்டிருந்த கிருபையும் பாதுகாப்பும்* என்பதாக இருந்தது. ஹோப், நியாயாதிபதிகளின் புஸ்தகத்திலிருந்து வாசிக்க, பில் அதை விவரிக்கத் தொடங்கினார். உடனே இயேசு, யோவான் 14—ம் அதிகாரத்தில் கூறினதை சபையோரிடம் வாசித்துக் காட்ட அவர் விரும்பினார். அவர் ஹோப்பிடம்

தலையசைத்து சைகை காட்டினார். அவள், "**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**" என்று வாசிக்கத் தொடங்கினாள், பில் உடனே நிறுத்தி, "வேதாகமம் கூறுவது உங்களுக்குக் கேட்டதா; நீங்கள் கலங்கிப் போகக் கூடாது" என்றார். பின் மீண்டும் ஹோப்பிடம் தலையசைத்து சைகை காட்டி, தொடர்ந்து வாசிக்கச் சொன்னார், அவள், "**தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்**" என்று வாசித்தாள், மீண்டும் பில்லி நிறுத்தி விட்டு, "நீங்கள் அதைச் செய்வீர்களா? நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர் தொடர்ந்து அலங்கோலமாகவும், மேடுபள்ளமாகவும் அவருடைய முதல் பிரசங்கத்தைப் பிரசங்கித்தாலும், அவர் இருதயத்தில் இருந்த அந்த உத்தமம் அவரை நல்ல பிரசங்கம் செய்பவராக ஆக்கியது.

அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைக் கவனித்தார், எல்லா பிரன்ஹாம் (பிரன்ஹாமின் தாயார்) தம்முடைய மகனின் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டார்கள். பில்லியின் ஜீவியத்தில் நடந்த வியக்கத்தக்க மனமாற்றமும் அவர் அற்புதமாக

சுகமடைந்ததும் அவர்களுடைய ஆத்துமாவைத் தட்டி எழுப்பியது. பில்லியின் தாயாராகிய எல்லா பிரன்ஹாம் தம்முடைய 39—ம் வயதில் இயேசு கிறிஸ்துவுக்குத் தம்முடைய ஜீவியத்தை ஒப்புக்கொடுத்தார்கள். சந்தோஷம் நிரம்பி வழிந்தது, பில்லி தம்முடைய தாயாருக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்.

அவருடைய தாயாருடைய மனமாற்றம் அவரை உற்சாகப்படுத்தினதால், பில்லி தம்முடைய தகப்பனாரையும் சபைக்கு வரும்படி வற்புறுத்தினார். சார்லஸ் பிரன்ஹாமோ (பில்லியின் தகப்பனார்) அதை மறுத்தார், பில்லி முழுமுயற்சியுடன் வற்புறுத்தியும் அவர் அசைந்து கொடுக்கவேயில்லை. அது பில்லியை கவலைப் பட செய்தது. ஆனாலும் இழக்கப்பட்டவர்களின் பேரிலுள்ள அக்கறையை அது எடுத்துப்போட முடியவில்லை. ஏனெனில் அவருடைய 14 வது வயதில் அவர் இழக்கப்பட்டவர்கள் இருக்கும் ஸ்லத்திற்கு போயிருந்த போது கிடைத்த திகிலூட்டும் அனுபவமும் அதற்குக் காரணமாயிருந்தது. இப்பொழுது, பில்லி, "அன்புள்ள தேவனே, என்னுடைய தகப்பனார் அதைப்போன்ற இடத்திற்குப் போகும்படி நீர்

அனுமதிக்க வேண்டாம். தயவுகூர்ந்து அவர் உம்முடைய கிருபையை காணும்படி செய்யும், அவர் உம்முடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளட்டும்” என்று அடிக்கடி ஜெபித்து வந்தார்.

ஒரு நாள் இரவு வேளையில், பெரும்பாலான அவருடைய குடும்பத்தினர் படுக்கைக்குச் சென்ற பிறகு, பில்லி முன் அறையிலிருந்த வைக்கோல் மெத்தையின் மேல் படுத்தவாறு அவருடைய தகப்பனாருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். அவருடைய தகப்பனாரோ உள்ளூர் மதுக்கடை ஒன்றில் குடித்துக் கொண்டிருந்தார். பில்லி ஜெபித்த வேளையில், ஒரு சத்தம், “எழுந்திரு” என்று கூறுவது போன்ற ஒரு உணர்வைப் பெற்றார். அவர் எழுந்து வாசலுக்கு வெளியே நடந்து சென்றார். ஏனென்று அவருக்குத் தெரியவில்லை, ஆனால் அவர் ஏதோவொன்றின் பக்கமாக இழுக்கப்படுவது போன்று உணர்ந்தார்.

வீட்டிற்குப் பின்னால், துடைப்பம் புல் (broomsage) மட்டுமீறி வளர்ந்து கிடந்தது. அவை சிவப்பு நிறத்தில் முழங்கால் உயரம் வரை வளர்ந்து கிடந்தது. அதற்குக் குறுக்காக ஒரு நடை பாதை சென்றது. பில்லி நட்சத்திர வெளிச்சத்தில் அப்பாதையைப் பின்தொடர்ந்து போனார். அந்த

மேய்ச்சல் நிலத்தின் நடுப்பகுதியை அவர் அடைந்த போது, அவர் முழங்கால்படியிட்டு, தம்முடைய தலையை தாழ்த்தி, தம்முடைய கரங்களை மடக்கிக் கொண்டு, தம்முடைய தகப்பனாருக்காகத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் கண்களைத் திறந்து பார்த்தார், அவருக்கு முன்னே பத்து அடி தூரத்தில் ஒரு மனிதர் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். அவர் ஒரு வழக்கத்திற்கு மாறான மனிதராகவும், குட்டையான சிறிய தோற்றமுடையவராகவும், தம்முடைய தோள்கள் வரை மயிரைக் கொண்டவராகவும், வெண் வஸ்திரம் தரித்தவராகவும், நட்சத்திர வெளிச்சத்தில் தெளிவாக பார்க்கும்படியாக நின்று கொண்டிருந் தார். அந்த மனிதர் பில்லியின் பக்கவாட்டில் கிழக்கு திசையை நோக்கியபடி நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு அமைதியான மனிதராக இருந்தார். அவருடைய கரங்களை மடக்கிக் கொண்டும், அவருடைய ஒரு காலை மற்ற காலுக்கு சற்று முன்னால் வைத்துக் கொண்டிருந்தார். பில்லி அந்தக் கால்களை இரண்டாவது முறையாகப் பார்த்தார். நம்ப முடியாத அளவுக்கு அந்த கால்கள் தரையைத் தொடாமல் தரைக்கு மேலே அந்தரத்தில் நின்றன.

அவர் தம்முடைய சொந்த கைமுட்டியை போதுமான வலி உண்டாகுமளவுக்கு கடித்துக் கொண்டே, "இப்பொழுது, ஒரு நிமிடம் காத்திரு" என்று பில்லி நினைத்தார். "நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. இல்லை, நான் அங்கே உள்ளே அப்பாவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன், ஏதோவொன்று இங்கே வெளியே வரும்படி சொன்னது... இங்கே இந்த மனிதர் நிற்கிறார்."

அது மிகவும் தத்ரூபமாக காணப்பட்டது. உயரமான புற்களில் வீசிய தென்றல் காற்றின் காரணமாக இந்த மனிதருடைய வெண் வஸ்திரம் காற்றில் அசைந்தது. பில் ஒரு துடைப்பக் குச்சியை ஒடித்து, பல்குத்தியைப் போன்று தம்முடைய வாயில் போட்டு மென்று கொண்டார். அவர், "அது கர்த்தராகிய இயேசுவைப் போன்று காணப்படுகிறதே. அது அவர் தானா என்று வியப்பாக உள்ளதே" என்று எண்ணினார்.

அவர் சிறிது அப்பால் நழுவிச் சென்று பார்த்தார். அப்போது அவரால் அம்மனிதருடைய முகத்தை சற்று அதிகமாக காண முடிந்தது. அவர் தம்முடைய தொண்டையைச் சரிசெய்ய, "ஊ—உம்" என்று கனைத்துப் பார்த்தார். அந்த மனிதர்

அசையவேயில்லை. பில்லி, “நான் அவரை கூப்பிடுவேன் என்று நம்புகிறேன்” என்று நினைத்து, “இயேசுவே?” என்று சத்தமாக அழைத்தார்.

அந்த மனிதர் திரும்பி, அவரை நோக்கி கரங்களை நீட்டினார்.

பில்லிக்கு ஞாபகம் உள்ள கடைசி காரியம் அதுதான். அவர் சுயநினைவை இழந்து, விழுந்தார், ஆனால் அந்த முகத்தை அவருடைய நினைவை விட்டு எடுத்துப் போடவே முடியவில்லை. அந்த முகத்தை வரைய எந்த ஓவியனாலும் முடியாது. அது அதிகார தோரணையுடன் காணப்பட்டது. அவர் பேசுவாரானால், உலகம் முடிவுக்கு வந்து விடும் போல் காணப்பட்டது, ஆனால் அவருடைய கண்களில் இரக்கமும் தயவும் அன்பும் சுடர்வீசின.

பொழுது புலர்ந்த போது, பில் தம்முடைய சுயநினைவிற்கு வந்தார். அவர் அப்போதும் துடைப்பப்புல் வயலிலேயே இருந்தார், குளிர்ந்த இரவுநேர காற்றின் காரணமாக நடுங்கிக்கொண்டிருந்தார். அவருடைய கண்ணீரால் பைஜாமா ஆடை ஈரமாகியிருந்தது. அவர் வீட்டிற்குச் சென்று உடையுடுத்தி விட்டு, அதைப்பற்றி அவருடைய மேய்ப்பருடைய

அபிப்ராயத்தைக் கேட்கும்படி உற்சாகத்தோடு கிளம்பி விட்டார்.









**சகோ. பினேகாஸ்**

போன்: 8838623242, 9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in